# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 57

ஜுலை 2013

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**சகரியா**

2801 பிறனுக்கு விரோதமாய் தீங்கு நினையாதே (8:17)

2802 பொய்யாணையின் மேல் பிரியப்படாதே (8:17)

2803 உன் பொல்லாத வழிகளையும், உன் பொல்லாத கிரியைகளையும் விட்டுத் திரும்பு (1:4)

2804 "கெம்பீரித்துப் பாடு; இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன்" (2:10)

2805 மாம்சமானவனே! கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிரு. (2:13)

2806 உண்மையாய் நியாயந்தீர் (7:9)

2807 உண்மையும் நீதியுமாயிரு. (8:8)

2808 உன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமும் செய் (7:9)

2809 புற ஜாதிகளுக்குள்ளே ஆசீர்வாதமாயிரு (8:13)

2810 பயப்படாதே (8:15); உன் கைகள் திடப்படக் கடவது (8:13)

2811 பிறனோடே உண்மையைப் பேசு (8:16)

2812 உன் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாந்தீர் (8:16)

2813 சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகி (8:19)

2814 கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணு (8:21,22)

2815 சேனைகளின் கர்த்தரைத் தேடு (8:21,22)

2816 மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ (11:17)

2817 கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள் (13:9)

**மல்கியா**

2818 கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தகுலைச்சலாக்காதே (1:12)

2819 உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதே (2:10)

2820 கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை பரிசுத்த குலைச்சலாக்காதே (2:11)

2821 பீறுண்டதையும், கால் ஊனமானதையும், நசல் கொண்டதையும் காணிக்கையாகச் செலுத்தாதே (1:13)

2822 உன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப் போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொள்ளாதே (1:14

2823 உன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணாதே (2:10,11)

2824 அருவருப்பான காரியம் செய்யாதே (2:11)

2825 உன் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்தாதே (2:17)

2826 பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள் பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றம், நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும் சொல்லாதே (2:1)

2827 சூனியக்காரரை நாடாதே (3:5)

2828 பொய்யாணை இடாதே (3:5)

2829 விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்ளாதே (3:5)



2830 பரதேசிக்கு அநியாயஞ் செய்யாதே (3:5)

2831 என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் அவைகளை விட்டு விலகிப்போகாதே (3:7)

2832 தசமபாகத்திலும் காணிக்கையிலும் தேவனை வஞ்சியாதே (3:8)

2833 கர்த்தருக்கு விரோதமாய்க் கடினமான பேச்சுக்களை பேசாதே (3:13)

2834 "தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்?" என்று சொல்லாதே (3:14)

2835 "அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே" என்று சொல்லாதே (3:15)

2836 அக்கிரமஞ் செய்யாதே (4:1)

2837 ஆசாரியனே! கர்த்தருடைய நாமத்தை அசட்டை பண்ணாதே (1:6)

2838 ஆசாரியனே! வழியை விட்டு விலகாதே (2:8); என் வழிகளைக் கைக்கொள் (2:9)

2839 ஆசாரியனே! வேதத்தைக் குறித்து யாரையம் இடறப்பண்ணாதே (2:8)

2840 ஆசாரியனே! வேதத்தைக் குறித்து பட்சபாதம் பண்ணாதே (2:9)

2841 ஆசாரியனே! என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்து (2:2)

2842 ஆசாரியனே! உன் உதடுகள் அறிவைக் காப்பதாக (2:7)

2843 விபசாரம் வேண்டாம் (3:5)

2844 உன் தகப்பனைக் கனம் பண்ணு (1:6)

2845 ஊழியக்காரனே! உன் எஜமானைக் கனம் பண்ணு (1:6)

2846 கர்த்தரைக் கனம் பண்ணு (1:6)

2847 கர்த்தருக்குப் பயப்படு (1:6)

2848 தேவனுடைய சமூகத்தை நோக்கிக் கெஞ்சு; அப்பொழுது உன்மேல் இரங்குவார் (1:9)

2849 கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடே இரு (2:5)

2850 சத்திய வேதம் உன் வாயிலிருப்பதாக (2:6)

***நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு***

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

# வேத ஆராய்ச்சி

**பா. பொற்செல்வன் ஆசீர்**

**வரலாற்று நூல்கள்**

வேதாகமத்தின முதல் 5 புத்தகங்கள் பஞ்சாகமம் என்ற மோசேயின் ஆகமங்கள் என்றும் நியாயப்பிரமாண தொகுப்பு என்றும் வெவ்வேறு பெயரில் அழைக்கப்படுகின்றன.

வேதாகமத்தின 6வது புத்தகமான 'யோசுவாவின் புத்தகம்' முதல் 'எஸ்தர் புத்தகம்' முடியவுள்ள 12 புத்தகங்கள் வரலாற்ற நூல்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றில் நாம் செமித்தியர் என அழைக்கப்படும் சேமின் (நோவாவின் மைந்தன்) சேமின் சந்ததியாரின வரலாற்றினை (ஆவிக்குரிய, சமூக அரசியல்) காண்கிறோம்.

மேன்மையான அரசியல் நிலமையும், சிறந்த சமூக வாழ்க்கையும் நாம் அவர்கள் வாழ்வில் காண்பது அவர்கள் யெகோவாவாகிய தேவனை அவர்கள் சரியாய் சார்ந்து நின்றபோது தான். எப்போது தேவனை விட்டு அந்நிய தேவர்களை சார்ந்தார்ளோ, சோரமார்க்கமாய் எப்போது பின்பற்றினார்களோ அப்போது எல்லாம் அவர்கள் சமூக அரசியல் வாழ்வு மோசமான நிலையை அடைந்தது.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி. 13:8). இன்றும் எந்த தேசம் எந்த தேசத்து மக்கள் தேவனை சரியாக பின்பற்றுகிறார்களோ அவர்களுடைய அரசியல் சமூகநிலை தேவனால் உயர்த்தப்படும். மட்டுமல்ல அந்த தேசத்தின் பாதுகாப்பு படைபலத்திலல்ல, இராணுவபலத்திலல்ல. அவர்கள் சார்ந்திருக்கிற உன்னதமான தேவனிடத்திலேயே இருக்கிறது.

தேசத் தலைவர்கள் (இராஜாக்கள்) தேவனை தேடினபோது ஜனங்களும் தேவனை தேடினார்கள். அவர்கள் பரிசுத்தமாய் வாழ்ந்த போது ஜனங்களும் பரிசுத்தமாய் வாழ்ந்தார்கள். தேச தலைவர்கள் (இராஜாக்கள்) சோரமார்க்கமாய் விக்கிரகத்தை பின்பற்றினபோது ஜனங்களும் சோரமார்க்கமாய் விக்கிரகங்களை பின்பற்றினார்கள். தேவனைத் தேடின இராஜாவும், ஜனங்களும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தேவனால் (சத்துருக்களினின்று) பாதுகாக்கப்பட்டார்கள் தேவனை மறந்தபோது ஆசீர்வாதம் இழந்து சாபமானார்கள். பாதுகாப்பு இழந்து அழிக்கப்பட்டார்கள். கொள்ளையிடப்பட்டார்கள். அடிமைகளாக்கப்பட்டார்கள். தேசம் தரித்திரத்தை சந்தித்தது.

ஒரு தேசத்தின் அரசியல் வாழ்வு பரிசுத்தமும், சமூக வாழ்வு உயர்வாகவும் இருக்க வேண்டுமானால், அத்தேசத்தின் ஆவிக்குரிய நிலை எத்தனை சிறந்ததாய் இருக்க வேண்டும் என்பதற்கு இவ்வரலாற்று நூல்கள் எடுத்துக்காட்டு. மாறாத கர்த்தர் வரலாற்று நூல்கள் மூலம் நமக்குக் கூறும் கூற்றும் அதுவே. இம்மாறா உண்மையை இந்திய தேசம் உணர்ந்தால் எத்தனை நலமாயிருக்கும்!

## யோசுவாவின் புஸ்தகம்

வரலாற்று நூல்களில் முதல் புத்தகம் யோசுவாவின் புத்தகம். இதில் 24 அதிகாரங்களும் 655 வசனங்களும் உள்ளன.

இதில் பெரிய அதிகாரம் 15வது அதிகாரம். சின்ன அதிகாரம் 20 ஆம் அதிகாரம். இப்புத்தகத்தில் 15 வாக்குத்தத்தங்களைக் காணலாம்.

இப்புத்தகம் கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்களித்த



தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலின் தொகுப்பே ஆகும். காண்க. யோசுவா 21:45,23:14

**நோக்கம்**

இப்புத்தகத்தின் நோக்கம் யோசுவா 18:3 அது கற்றுத்தரும் பாடம் ஆவிக்குரிய வாழ்வில் தேவன் தரும் ஆசீர்வாதங்களை வெற்றிகளை தாமதிக்கச் செய்வதும் இழக்கச் செய்வதும் அசதியான வாழ்வு என்பதே. 'போய் சுதந்தரியுங்கள்' என்பது இப்புத்தகத்தின் அழைப்பு. எந்த மட்டும் அசதியாயிருப்பீர்கள் என்பது இப்புத்தகம் அளிக்கும் எச்சரிப்பு!

**பெயர் வரலாறு**

வேதத்தில் தனி நபர் பெயரில் அழைக்கப்படும் முதல் புத்தகம் இதுதான். இந்த புத்தகத்தின் முக்கிய நபர் யோசுவாவே. அவரின் பெயராலே இப்புத்தகம் அழைக்கப்படுகிறது. இப்புத்தகம் எபிரேய மொழியில் Yehoshva என்றும் கிரேக்க மொழியில் Iesous Navs (நூனின் குமாரனாகிய யோசுவா) என்றும் லத்தீன் மொழியாக்கத்தில் Liber Josue (யோசுவாவின் புஸ்தகம்) என்றும் அழைக்கப்படுகிறது. நமது தமிழ் வேதாகம தலைப்பு லத்தீன் மொழியை பின்பற்றி வந்ததாகும்.

**யோசுவா**

யோசுவாவின் இயற்பெயர் ஒசேயா. தகப்பனார் பெயர் நூன். கோத்திரம் எப்பிராயீம் (எண். 13:8) யோசுவாவைக் குறித்து யாத்திரகாமம் 24:13, 32:17, 33:11 ஆகிய வசனங்கள் மோசேயோடு அவன் கொண்டிருந்த நெருங்கிய உறவைக் காட்டுகிறது. எனவேதான் யோசுவாவின் புத்தகம் யோசுவாவை 'மோசேயின் ஊழியக்காரன்' யோசு. 1:1 என்று நமக்கு அறிமுகம் செய்கிறது. யோசுவாவின் புஸ்தகம் முடியும்போது யோசுவா என்னும் கர்த்தருடைய ஊழியக்காரன் (24:29) என்று யோசுவாவை உயர்த்தி காட்டுகிறது.

மோசேயின் ஊழியக்காரனாக தன் ஊழியத்தை ஆரம்பித்து கர்த்தருடைய ஊழியக்காரனாக தன் ஊழியத்தை 110 வயது வரைக்கும் நிறைவேற்றிய யோசுவாவின் ஆவிக்குரிய வளர்ச்சி எத்தனை விந்தையானது. இவர் பெயரை இப்புத்தகம் தாங்கினதில் வியப்பேதுமில்லை.

யோசுவா மோசேயின் ஊழிய்க்காரனாயிருந்தவன். எண். 13:3,8 வசனங்களின்படி தன் கோத்திரத்து தலைவனாகிறான். இவனுக்கு முந்தின தலைவன் அம்மியூதின் குமாரன் எலிஷாமா எண். 1:10, 10:22 அவன் எண்ணாகமத்தின் புத்தகத்தில் 10ம் அதிகாரத்திற்கும் 13ம் அதிகாரத்திற்கும் இடையில் ஏற்பட்ட மூன்று வாதைகளுள் முதல் இரண்டில் ஒன்றின் நிமித்தம் மரித்திருக்க வேண்டும். அந்த இடத்தில் யோசுவா (ஒசேயா) தலைவனாகிறான். ஒசேயாவை யோசுவா என்று பெயரிட்டது மோசே. எண். 13:16. ஒசேயா என்பதின் அர்த்தம் இரட்சிப்பு. யோசுவா என்பதின் அர்த்தம் யெகோவாவே இரட்சிப்பு. இந்த பெயர் மோசே யோசுவாவின் பக்தி வைராக்கியத்தைப் பார்த்து கொடுத்திருக்கலாம். அவனுடைய வைராக்கியத்திற்கு வேதம் கொடுக்கும் சான்று யாத். 32:17, எண். 11:28,29, யோசுவா 24:15

**சந்ததி வரலாறு**

ஆதாமுக்கு ஏழாம் தலைமுறை ஏனோக்கு

ஆதாமுக்கு 20ம் தலைமுறை ஆபிரகாம்

ஆதாமுக்கு 24ம் தலைமுறை எப்பிராயீம்

ஆதாமுக்கு 33ம் தலைமுறை யோசுவா நாளா. 17:23-27

எப்பிராயீம் – பெரியா – ரேப்பாக் – தேலாக் – தாகான் – லாதான் – அம்மியூத் – எலிஷாமா – நூன் – யோசுவா

### பெருங்காலம் DISPENSATION OF LAW

யாத்திராகமம் முதல் உபாகமத்தின் புத்தகங்கள் வரை வாக்குத்தத்த காலம் முடிந்து நியாயப்பிரமாண கால தொடக்கத்தை காட்டுகிறது. யோசுவாவின் புஸ்தகம் நியாயப்பிரமாண காலத்தை நமக்கு காட்டுகிறது. கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்ட கட்டளைகள் யாவற்றிற்கும் இஸ்ரவேல் புத்திரர் கீழ்ப்படிந்து அதன்படியே செய்தார்கள். உபாட. 34:9 இதைத்தான் இப்புத்தகத்தில் காண்கிறோம்.

### கால உள்ளடக்கம்

இப்புத்தகம் 33ம், 34ம் தலைமுறை வரலாறுகளை நமக்குத் தருகிறது.

### புத்தகத்தின் உட்பிரிவுகள்

| | | |
|---|---|---|
| 1. | யோசுவாவின் அழைப்பு | – அதி. 1:5, 13–15 |
| 2. | யுத்தங்கள் | – அதி. 2–15 முடிய |
| 3. | சுதந்தரவீதம் பங்கீடுகள் | – அதி. 13–21 முடிய |
| 4. | யோசுவாவின் பிரசங்கம் | – அதி. 22–24:28 முடிய |
| 5. | யோசுவாவின் மரணம் | – அதி. 24:29–31 முடிய |
| 6. | யோசேப்பின் எலும்பின் அடக்கம் | – அதி. 24:32 |
| 7. | எலெயாசாரின் மரணம் | – அதி. 24:33 முடிய |

### மரணங்கள்

இப்புத்தகத்தின் இறுதியில் தேவன் எழுப்பிய இரு தலைவர்களின் மரணம் எழுதப்பட்டுள்ளது. 1. யோசுவா 2. எலெயாசார்

### இப்புத்தகத்தில் வெற்றியின் அடையாளம்

யோசுவா 18:1 ஆசரிப்பு கூடாரம் சீலோவில் ஸ்தாபிக்கப்பட்டபோது தேசம் அவர்கள் வசமாயிற்று. எங்கு ஆராதனையும் ஜெபமும் எழும்புகிறதோ அங்கு பூரண ஜெயமுண்டு என்பதற்கு இந்த வார்த்தை நல்ல சான்று.

### புத்தக சிறப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | யோசுவா ஜெயித்த இராஜாக்கள் | – 31:12–24 |
| 2. | அடைக்கலப்பட்டணங்கள் | – 6 – 20 :7,8 |
| 3. | ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டது | – 18:1 |
| 4. | சூரியனும் சந்திரனும் தரித்து நின்றல் | – 10:12–14 |

இப்புத்தகத்தின் இஸ்ரவேல் ஜனங்கள் யுத்த மனுஷரென்றும் யுத்த வீரனென்றும் அழைக்கப்படுவதே தனிச்சிறப்பு

### இப்புத்தகம் எழுதப்பட்ட காலம்

யோசு. 6:25 வசனத்தின்படி ராகாப் மரிக்கும் முன்பு (அதாவது ரூத்தின் கணவனாகிய போவாஸின் தாயான ராகாப் (மத். 1:5) இப்புத்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும். யோசு. 6ம் அதிகாரம் சொல்லும் ராகாபும் மத். 1:5 சொல்லும் ராகாபும் ஒரே நபரே. அப்படியானால் ரூத், நகோமி வாழ்ந்த காலமும் இப்புத்தகம் எழுதப்பட்ட காலமும் சமகாலமாய் இருக்க வேண்டும்.



### கற்றுக்கொள்ள சில பாடங்கள்

எரிகோவின் வெற்றி – துதியின் இரகசியம்

ஆயின் தோல்வி – சாபத்தீடானதில் பங்கு

கிபியோனின் குடிகளோடு உடன்படிக்கை – தேவ ஆலோசனையை நாட மறப்பது

சூரியனும் சந்திரனும் நின்றது – மனிதன் தேவனின் சொல் கேட்டால் தேவன் மனிதன் சொல் கேட்பார்

### எழுதியவர்கள்

இப்புத்தகம் யோசுவா (24:26) மற்றும் இஸ்ரவேல் தேசத்து தலைவர்கள் எழுதியவைகளின் (18:8,9) தொகுப்பாகவும் மற்றும் யாசேர் என்பவரின் புத்தகத்திலிருந்து பெற்றுக் கொண்டவைகளும் (10:13) இப்புத்தகம் உருவாவதற்கு காரணமாகும். எனவே இப்புத்தகம் ஒரு தனி நபரின் முயற்சியால் மட்டுமிராமல், ஒரு கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்புத்தகத்தை எழுத தேவன் யோசுவா போன்ற பலரை பயன்படுத்தி இப்புத்தகத்தை நமக்கு தந்துள்ளார். இப்புத்தகத்தை எழுத தேவன் பயன்படுத்தியது பலர். இதன் ஆசிரியர் ஆவியானவர் 2தீமோ.3:16.

### முதலும் கடைசியும்

இப்புத்தகம் கட்டளையோடு ஆரம்பிக்கிறது. கட்டளை பிறப்பது தேவனிடத்திலிருந்து இப்புத்தகம் முடியும் போது கட்டளையிட்ட தேவனுக்கு கீழ்ப்படிந்ததினால் ஆசீர்வாதத்தை சுதந்திரமாய் பெற்ற மக்கள் கர்த்தரையே சேவித்து அவர் சத்தத்திற்கே கீழ்ப்படிவோம் என செய்த உடன்படிக்கையோடு நிறைவு பெறுகிறது. முதல் கட்டளை 1:1,2 ஜனங்களின் உடன்படிக்கை 24:23–25

இது முழு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு சிறந்து எடுத்துக்காட்டு. இப்படி வாழத் தவறினால் என்ன நடக்கும். அதுதான் நியாயாதிபதிகள்.

---

## செய்திகள்

- இந்தியாவிலேயே முதன்முதலில் காந்திஜிக்கு ஓர் அரும்காட்சியகம் அமைக்கப்பட்டது மதுரையில் தான்.
- கட்டப்பொம்மனை தூக்கிலிட்ட ஆலன்துரை கல்லறை மதுரையில் உள்ளது.
- தமிழ்மொழி செம்மொழியாக்க கருதப்பட வேண்டும் என்று முதலில் குரல் எழுப்பிய பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த வீடு மதுரையில் உள்ளது.
- மதுரை பட்டணத்தில் தமிழ் மாதத்தின் 12 மாதங்களிலும் திருவிழாக்கள் கொண்டாடப்படுகிறது. மதுரையை திருவிழா பட்டணம் என்று அழைக்கலாம். மதுரைக்காய் ஜெபியுங்கள்.
- தமிழ்நாட்டில் குட்கா, பான் மசாலா போன்ற புகையிலை பொருட்கள் தயாரிக்கவும், சேமித்து வைக்கவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் மதுக்கடைகளை அரசே ஏற்று நடத்தும் அவலம் தொடர்ந்து வருகிறது. இதுவும் மாற ஜெபிப்போம்.
- உத்திரகாண்ட் மாநிலம் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்த பக்தர்கள் ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்து விட்டனர். லட்சத்துக்கு மேற்பட்டோர் ஆங்காங்கே சிக்கி தவித்தனர். இவர்களை இராணுவம், விமானப்படையினர், ஹெலிகாப்டர் விமானம் மூலம் மீட்டனர். உத்திரகாண்ட் மாநிலத்திற்காய் ஜெபியுங்கள்.

# தேவனுடைய அதிகாரத்தை அங்கீகரியுங்கள்

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நீங்கள் செய்ய வேண்டிய தீர்மானங்களைக் குறித்து இந்த ஆண்டின் ஒவ்வொரு ஆத்தும ஆதாயகர் இதழிலும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தி வருகிறார். தேனுக்குள்ளாய் நீங்கள் எடுக்கிற ஒவ்வொரு தீர்மானங்களிலும் தோற்கா வண்ணம் தேவன் தாமே உங்களைக் காத்துக் கொள்ளுவாராக. யோபு என்னும் தேவ மனிதனைக் குறத்து பரிசுத்த வேதாகமத்தில் ஒரு தனி புத்தகமே அமைந்திருக்கிறது. வேதபுத்தகத்தில் காட்டப்படுகிற அவருடைய வாழ்க்கைச் சரித்திரம் தேவபிள்ளைகளுக்கு சவாலாகவும் சாட்சியாகவும் அமைந்திருக்கிறது.

யோபுவின் தேவபக்தியையும் தெய்வபயத்தையும் உத்தமத்தையும் குறித்து பல்வேறு சாட்சிகளை வாசிக்கிறோம்.

1. **வேதத்தின் சாட்சி** : அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். (யோபு 1:1)
2. **தேவனுடைய சாட்சி** : உத்தமனும் ... ஒருவனும் இல்லை (யோபு 1:8)
3. **மனைவியின் சாட்சி** : நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? (யோபு 2:9)
4. **நண்பர்களின் சாட்சி**: உம்முடைய வழிகளின் உத்தமம் உம்முடைய நம்பிக்கை யாயும் இருக்க வேண்டியதல்லவோ? (யோபு 4:6)
5. **சாத்தானின் சாட்சி** : அவன் தேவனுக்குப் பயந்து நடக்கிறான். (யோபு 1:9)

உத்தமனாகிய யோபு கடந்துவந்த பாதைகளிலெல்லாம் தன் சாட்சியைக் காத்துக் கொள்ளுகிறார்.

### 1. சோதனையை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்

நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய காரியம் சாத்தானுக்கு தேவன் அனுமதி கொடுக்கிறார். சாத்தான் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி, யோபுவின் செல்வங்கள், உடமைகள், பெற்ற பிள்ளைகள் யாவற்றையும் இழந்து போகச் செய்கிறான். சாத்தானுக்கு தேவன் கொடுத்த அனுமதியை யோபு அங்கீகரித்து ஏற்றுக் கொண்டு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்.

பிசாசுகள் பிடித்திருந்த மனிதனை குணமாக்கும் போது பிசாசுகள் பன்றிக் கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடுக்க வேண்டும் என வேண்டிக் கொண்டன; அதற்கு இயேசு போங்கள் என்றார். (மத். 8:31,32). சீமோனே, சீமோனே, இதோ கோதுமையை சுளகினால் புடைக்கிறது போல சாத்தான் உங்களை புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். (லூக். 22:31) என்பதாக இயேசு தம்முடைய சீஷரிடத்தில் கூறுகிறார். சாத்தான் தன் அதிகாரத்தை பயன்படுத்தி தேவபிள்ளைகளுக்கு தேவனுடைய அனுமதியோடு மாத்திரம் சோதனைகளை கொண்டு வரமுடியும். "சத்துரு சோதித்திட தேவ உத்திரவுடன் வருவான், ஆனால் இயேசு கைவிடார், தானாய் வந்து இரட்சிப்பார்" என்ற பாடல் வரிகளை நினைவு கூருவோம். உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தேவனுக்காய நிற்கும்பொழுது சத்துருவானவன் கொண்டு வருகிற எல்லாச் சோதனைகளையும் போராட்டங்களையும்



தேவன் மீது நீங்கள் வைத்திருக்கிற விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருப்பதனால் மேற்கொள்ளுங்கள்.

### 2. சாட்சியைக் காத்துக்கொள்ளுங்கள்

மனிதன் சோதனையை இரண்டு வழிகளில் சந்திக்கிறான். ஒன்று அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் (யாக். 1:14). இதனுடைய விளைவு பாவம். அதன் முடிவு மரணம். மற்றொன்று தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவ அனுமதியோடு சந்திக்கிற சோதனை. இந்தச் சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமன் என்று விளங்கினபின்பு கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரிடத்தைப் பெறுவான். (யாக். 1:12). யோபு ஏதோமியர் தேசத்தில் ஒரு கோத்திரத் தலைவன். அவருடைய சரித்திரம் நீதிமான்களுக்கு வரும் துன்பங்களைப் பற்றி தெளிவு படுத்துகிறது. சில சமயங்களில் உங்களுக்கு நேரிடும் துன்ப துக்கங்களுக்கு நியாயம் அறியாது கலங்குகிறீர்களா? அத்தருணங்களில் கர்த்தருடைய சித்தம் அவருடைய அதிகாரம் இவைகளை அங்கீகரித்து எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். இதோ யோபுவின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள். பொறுமையாய் இருக்கிறவர்கள் பாக்கியவான்கள். கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரகமும் உள்ளவராயிருக்கிறார். (யாக். 5:11). நல்நோக்கமில்லாமல் தேவன் உங்களது வாழ்க்கையில் எதையும் அனுமதிக்க மாட்டார். ஆதலால் இச்சூழ்நிலைகளில் இன்னம் தேவனுக்குள்ளாய் பக்திவிருத்தி அடைந்து வளர்வதே உங்கள் கடமை என்று உணர்ந்து கொள்ளுங்கள்.

### 3. தேவனின் அதிகாரத்தை அங்கீகரியுங்கள்

வேதத்தாலும், தேவனாலும், மனைவியாலும், நண்பர்களாலும், சாத்தானாலும் கூட சாட்சி பெற்ற யோபு தன் வாழ்வில் நன்மைகளை சுதந்தரித்துக் கொள்ளும்போது மாத்திரமல்ல, இழப்பின் பாதையல் கடந்து செல்லும்போதும், தேவனுடைய அதிகாரத்தை அங்கீகரித்து எல்லாவற்றிற்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் (யோபு 1:21). தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ (யோபு 2:10) யோபு தன் வாழ்க்கையிலும், வார்த்தையிலும் நிதானமாயிருந்தார். என் தாசனாகிய யோபு பேசினதுபோல நீங்கள என்னைக் குறித்து நிதானமாய் பேசவில்லை (யோப 42:7,8). தேவனுடைய பலத்த கையின் கீழ் அடங்கியருந்தபடியால், உத்தமத்தில் உறுதியாய் நிலைத்திருந்த படியால், இந்தச் சூழ்நிலையிலும் தன் சிநேகிதனுக்காக தேவனிடத்தில் வேண்டுதல் செய்தபடியால், கர்த்தர் யோபுவின சிறையிருப்பை மாற்றினார். யோபுவுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்கு தந்தருளினார். (யோபு 42:10). கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். இதற்குப் பின்பு 140 வருடம் உயிரோடிருந்தான (யோபு 42:16) நீங்களும் உங்கள் வாழ்வின் நன்மையிலும், தீமையிலும், உயர்விலும், தாழ்விலும் தேவனுடைய அதிகாரத்தை அங்கீகரித்து தேவனுக்கே ஸ்தோத்திரம் செலுத்துங்கள். இரட்டிப்பான நன்மைகளை உங்களுக்குத் தருவார்.

எனது தீர்மானம் : யோபுவைப் போல, என் வாழ்வில் எந்த நிலைமையிலும் தேவனின் அதிகாரத்தை அங்கீகரித்து, எல்லாவற்றிலேயும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்யத் தீர்மானிக்கிறேன்.

# தேவாலயம்!

**Dr. பொ. செல்வராஜ்** கோவை

பவுலடிகளார் எபேசியருக்கு எழுதிய மடலை வாசித்துப் பாருங்கள். நாம் தான் தேவாலயம். தேவாலயம் நாம் தான். ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் உடலில் ஓர் உறுப்பாவார். தேவாலயத்தின் பெயர் கிறிஸ்துவின் உடல். கிறிஸ்தவன்(ள்) எனும் சொல் தேவாலயத்தின் இன்னொரு இணைச் சொல்லாகும். எபேசியர் மடலில் தேவாலயத்தைக் குறிப்பிடும் ஆறு உருவகங்களைக் காண்கிறார்.

**I கிறிஸ்துவின் உடலாகிய தேவாலயத்தில் கிறிஸ்துவே தலையாக இருக்கிறார்.**
எபேசியர் 1:22-23; தேவனால் நியமிக்கப்பட்ட கிறிஸ்து.

**II தேவாலயம் ஒரு ஆவியானவர் இல்லம்**
எபேசியர் 2:21-22; தேவ ஆவியானவர் உறையும் இடம்

**III தேவாலயம் ஒரு புதிய மனிதன்**
(2கொரிந்தியர் 5:17; கிறிஸ்துவுக்குள்ளிருப்பவன் புதிய படைப்பாக இருக்கிறான்)
எபேசியர் 4:24; நீதியிலும் தூய்மையிலும் தேவனைப் போலிருக்க உருவாக்கப்படும் புதிய மனிதன்.

**IV தேவாலயம் ஒரு இரகசியம்**
எபேசியர் 3:8-10; தேவனுடைய ஞானம் தேவாலயம் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது.

**V தேவாலயம் ஒரு மணமகள்**
எபேசியர் 5:25-27; கணவன் மனைவியிடம் அன்புகூருவதுபோல் கிறிஸ்துவும் தேவாலயத்தில் அன்பு கூருகிறார்.

**VI தேவாலயம் ஒரு படைவீரன்**
எபேசியர் 6:13-17; தேவனுடைய முழு ஆயுதம் ஏந்தவேண்டிய படைவீரனாகிய தேவாலயம்.

தேவாலயம் வழியாக தேவன் செயல்வடுவதை உலகத்தார் அறியாமலிருக்கலாம். ஏனெனில் உலகிற்குப் பரலோக அனுபவம் கிடையாது. ஆனால் நமக்குத் தெரியும். தேவனுடைய வல்லமை நம் வழியாகப் புறப்பட்டுச் செல்கிறது. தேவனின் அனபு நம்மிலிருந்து பாய்ந்தோடுகிறது. யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. நாம் வெற்றியின் பக்கம் இருக்கிறோம். ஏன் நாம் சோர்வடைய வேண்டும்? நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்றே. நம்முடைய அழைப்பிற்குகந்தவர்களாக நாம் வாழ வேண்டும். அவ்வளவுதான்!

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 ஜூலை 30 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**



## துதியுங்கள்

1. தேவன் அலுவலகத்திற்கு கணணி அனுபவமுள்ள 2 சகோதரர்களைத் தந்தமைக்காகத் துதியுங்கள்.
2. தேவனுடைய கூடாரத்தில் பணிபுரிய ஒரு புதிய குடும்பத்தை தேவன் தந்தமைக்காக...
3. நமது மிஷனெரிகள் சகோ. மோசஸ் (ஸ்ரீமூலக்கரை பணித்தளம்) சகோ. ஜெரால்டு இராஜசேகர் (பேட்மா நகரம் பணித்தளம்) சகோதரி ஜெயந்தி (பட்டாண்டி விளை பணித்தளம்) ஆகியோருக்கு அவர்களுக்கு சொந்தமாய் அவர் பெயரிலேயே இரு சக்கர துரித வாகனம் வாங்க ஊழியத்திலிருந்து ரூ. 10,000 வீதம் கொடுக்க கிருபை செய்த தேவனைத் துதியுங்கள்.
4. தலைமை அலுவலகத்தில் வெகுநாட்கள் சுமார் 2½ வருடத்திற்கு மேல் கட்ட தடை பட்டிருந்த கட்டிட பணியை திரும்ப துவங்க கிருபை செய்த தேவனைத் துதியுங்கள்.
5. நமது மிஷனெரி சகோதரி சாந்தி ராஜம் (புதுக்கோட்டை பணித்தளம்) அவர்கள் தாயாரும் நமது தன்னார்வ ஊழியருமான திருமதி. ஞானவடிவு அவர்களுக்கு 5-6-2013 அன்று நடைபெற்ற அறுவை சிகிச்சையிலிருந்து சுகம் பெற்று வீட்டிற்கு வர கிருபை செய்த தேவனைத் துதியுங்கள்.
6. நமது மிஷனெரி திருமதி. பரஞ்ஜோதி (தூத்துக்குடி ரூரல்) அவர்கள் கணவர் திரு. ஜனார்த்தனன் டேவிட் அவர்கள் காலிலே 2 அறுவை சிகிச்சை முடிந்து வீடிற்கு வர கிருபை செய்த தேவனைத் துதியுங்கள். பூரண சுகம் பெற்று நடக்க பெலனடைய...
7. நமது மிஷனெரி திருமதி. நல்மணி அவர்களுக்கு கை எலும்பு முறிவிலிருந்து சுகம் கொடுத்த தேவனைத் துதியுங்கள்.
8. நமது மிஷனெரி திருமதி. கிரீடா ஆர்தர் அவர்களுககு நடந்த விபத்தில் பாதிக்கப்பட்ட கையில் தேவன் கொடுத்த சுகத்திற்காகவும், பூரண சுகம் கிடைத்து ஊழியம் செய்ய...
9. நமது மிஷனெரி திருமதி. ரூத்மேரி அவர்களுக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகவும் தற்போது பணித்தளத்தில் இருக்கச் செய்த தேவனைத் துதிப்போம். மருத்துவ தொடர் சிகிச்சை மூலம் இன்னும் பெலனடைய ஜெபிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்

10. தூத்துக்குடி மாவட்டம் மேட்மா நகரம் கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட காணப்படுகிற தடைகள் மாறி சீக்கிரத்தில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.
11. விருதுநகர் மாவட்டம் நள்ளி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட ரூ. 1 இலட்சம் தந்த குடும்பத்தாரை தேவன் ஆசீர்வதிக்கவும், இங்கு ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.
12. விருதுநகர் மாவட்டம் கன்னித்தேவன் பட்டி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்டப்பட ஆகும் தேவைகள் சந்திக்கப்பட...
13. திருப்பூர் மாவட்டம் தொட்டிப்பாளையம் கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட ஆகும் தேவைகள் சந்திக்கப்பட்டு ஆலயம் கட்டப்பட....
14. திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் பணித்தளத்தில் சின்னக்காளன்பட்டி கிராமத்தில் மிஷனெரி ஆலயம் கட்ட தேவன் எழும்பத் தந்த குடும்பத்திற்காக... விரைவில் ஆலயம் கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.
15. சாத்தூர் ரூரல் பணித்தளத்தில் மிஷனெரி இல்லம் கட்ட ஆகும் தேவைகள் சந்திக்கப்பட்டு, மிஷனெரி இல்லம் கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.
16. நமது மிஷனெரி சகோதரி. பவுண் அவர்கள் சகோதரர் சாமுவேல்ராஜ் (வயது 40) இருதய பெலவீனம் நீங்க மருத்துவமனையில் உள்ள அவரை தேவன் குணமாக்க...
17. Dr. ரோஜர் (President YSM) துணைவியார் திருமதி. சலோமி ஜெபக்கனி சுகவீனம் நீங்கி சுகமடைய..

## மகிமையில் பரமனோடு

நமது ஊழியத்தோடு 30 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்பு கொண்டு, ஜெபித்து, தாங்கி வந்த, நேசித்த பணித்தளங்களை சந்தித்து ஊழியம் செய்த, குமரி மாவட்டம் தென்தாமரைக்குளத்தை சேர்ந்த **Dr. ஜார்ஜ்** (இம்மானுவேல் சுவிசேஷ ஜெபக்குழு) அவர்கள் கடந்த 1-6-2013 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் நமது பணித்தளங்களில் மாதம் ஒருமுறை ஆலயம் இல்லாக்கிராமங்களில் நற்செய்தி கூட்டங்களை நடத்தி வந்தார்கள். நமது ஊழியங்களை மாத்திரம் அல்ல அநேக மிஷனெரி ஊழியங்களுக்கு தங்கள் ஊழிய ஐக்கியத்தின் மூலம் ஆசீர்வாதமாக பயன்படுத்தப்பட்டார்கள். அருமை சகோதரருடைய இழப்பு அவருடைய குடும்பத்திற்கும் இம்மானுவேல் சுவிசேஷ ஜெபகுழுவிற்கும் பெரிய இழப்பாகும். அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகள் ஆறுதலுக்காக ஜெபியுங்கள். இம்மானுவேல் சுவிசேஷ ஜெபக்குழுவிற்காகவும் அதன் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

## ஆகஸ்டு 2013 – ஜெபமாதம்

1981ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதத்தை ஜெபமாதமாக ஆசரித்து வருகிறோம். இந்த ஆண்டும் அவ்விதம் ஜெபிக்க ஆயத்தப்படுகிறோம்.

### ஆகஸ்ட் மாதத்தில் உபவாச ஜெப முகாம்கள்

1. சிவகாசியிலும் (ஆகஸ்ட் 15 -17) 2. ஏழாயிரம்பண்ணை (ஆகஸ்ட் 29-31) நடைபெறும். விபரம் அட்டை பின்பக்கத்தில் உள்ளது. இணைந்து ஜெபிக்க உங்களை அன்போடு அழைக்கிறோம்.

### சிறப்பு உபவாச ஜெபங்கள்

மாதத்தின் 31 நாட்களும் ஆங்காங்கே உபவாச ஜெபங்கள் நடைபெறும் மற்றும் நடைபெறவுள்ள உபவாச ஜெப விபரங்களை அடுத்த மாத பத்திரிக்கையில் வெளியிடுவோம். அந்த ஜெபங்களிலும் கலந்து கொண்டு தேசத்திற்காக, உலக எழுப்புதலுக்காக, ஊழியங்களுக்காக, நமக்காக ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

### 24 மணி நேர உபவாச ஜெபம்

வழக்கம் போல் நடைபெறும் 24 மணி நேர உபவாச ஜெபம் இந்த ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி நடைபெறாமல் செப்டம்பர் 9 அரசு விடுமுறை நாள் திங்கட்கிழமை நடைபெறும். ஆகஸ்ட் 15ம் தேதி விடுமுறை நாளாயிருந்தாலும் பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் யாவரும் ஜெபத்தில் கலந்து கொள்ள தடையாக இருப்பதால் இந்த மாற்றம் ஜெபத்துடன் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நாளை நீங்கள் குறித்து வைத்து திட்டமிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### உங்கள் வீட்டில் உபவாசித்து ஜெபிக்கலாமே!

ஜெபமாதத்தில் பத்திரிக்கையில் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க ஜெபக்குறிப்புகள் தேசத்திற்காக ஊழியத்திற்காக, உலக எழுப்புதலுக்காக வெளியிடப்படும். அதை பயன்படுத்தி ஒருநாளாவது உங்கள் வீட்டில் ஒரு நான்கு மணி நேர ஜெபக்கூடுகையை ஏற்படுத்தி ஜெபிக்க திட்டமிடுங்கள்.



## மகிமையில் பரனோடு

சகோ. S. ஞானராஜ் (Mission Director, Young Soul Winners Mission) அவர்கள் தகப்பனார் திரு. செல்லத்துரை (வயது 85) கடந்த 17-6-2013 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். அவர்கள் தாயார் மற்றும் குடும்பத்தினர் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2013 ஜுலை 31 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*தேவசெய்தி :* **சகோதரி. ராணி தர்மராஜ்,** சிவகாசி

**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

## திருவசனத் தேர்வு – செப். 29 கடைசி ஞாயிறு

நமது ஊழியத்தின் மூலம் வாரம் 4 என்ற புத்தகம் 52X4 வசனங்கள் என்ற அடிப்படையில் மனனம் செய்ய வெளியிடப்பட்டது. அந்த புத்தகத்தில் மொத்தம் 208 வசனங்கள் இருப்பிடம் எளிதில் நினைவில் வைக்க வசதியாக உள்ள விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வசனங்கள் அடிப்படையில் ஒரு திருவசனத்தேர்வு மேற்கண்ட தேதியில் நடைபெறும், தேர்வுகள் ஞாயிற்றுகிழமை மதியம் 3 மணி முதல் 4.30 மணி வரை நடத்தப்படும்.

தேர்வு : **9 - 15 வயதினர்** **16 - 30 வயதினர்,**
**31 - 45 வயதினர்** **45க்கு மேலான வயதினர்**

என 4 பிரிவினர்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 பேருக்கு பரிசுகள் உண்டு, தேர்வினை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.

தேர்வை நீங்கள் உங்கள் ஆலயத்தில், ஜெபஜக்கியத்தில், பள்ளி, கல்லூரியில் எழுதலாம். ஒரு தேர்வு மையத்திற்கு 25 பேருக்கு குறையாமல் எழுத வேண்டும்.

அல்லது நாங்கள் குறிப்பிடும் மையத்திற்கு வந்து எழுத வேண்டும். 25 பேருக்கு குறையாமல் எழுதும் தேர்வு மையங்களுக்கு தேர்வு மையம் வாரியாக முதல் பரிசுகள் 4 உண்டு. (1 பிரிவினருக்கு ஒரு பரிசு வீதம்)

தேர்வுக்கு அனுமதி கட்டணம் : ரூ.20 /- மட்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.**

94432 89026, 94421 20257, 94431 95395